THE GARDEN OF THE HEART.

இதய சிங்கார வனம்

AN ANGLO-VERNACULAR MAGAZINE FOR WOMEN AND GIRLS.

October, 1912.

CONTENTS

To our Readers - THE EDITOR.

Our Own Queens - MISS PARSLEE.

Love and Death - MISS DALTON.

Manchester
THE REV. CANON RICHARDSON.

Needlework Patterns.
Narrow Irish Insertion.
A Lacy Edging.

A Talk about the Stars MR. J. HARVEY.

Christmas Day - - MISS VEDI.

WOMEN'S AUXILIARY OF THE C.L.S. FOR INDIA,
35, John Street, Bedford Row, London, W.C.

இந்திய ஸ்திரீகளுக்கான பத்திரிகை

இதய சிங்கார வனம்

தீவர் என்ற கன்னிகா பெருமாட்டியால் நடைபெறுவது

வயது I அக்டோபர் 1912 இலக்கம் 4

நம் பத்திரிகை படிப்போருக்கு

என் பிரியைகளே,

நம் பத்திரிகை இந்த வருஷத்தின் கடைசி பாகமாகிய 4-ம் இலக்கத்தை அடைந்துவிட்டது உங்களுக்குப் பிரியமாயிருக்கும். அது வரவர மிக விசாலித்துக்கொண்டே போகும் இடப்பரப்பில் சென்றுலாவி, இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள சகல பெண்பாலாருக்கும் வெகு அநேக வருடங்களுக்குக் கிடைக்கும் பண்டமாக விரும்புகிறோம். இந்த விருப்பம் நிறைவுற, இந்தப் பத்திரிகையைப் பெறுகிற ஒவ்வொருவரும் அதைத் தம் நண்பிகளுக்கும் அயலாருக்கும் அறியப் பண்ணவேண்டும். படித்த பத்திரிகையைப் பிறர் படிக்கக் கொடுத்தால் அதிலிருக்கிற விஷயமும் கதையும் ஒரே இலக்கத்திலே முடியாதாகையால், அந்த இலக்கத்தைப் படித்தவர்கள் அடுத்த இலக்கத்தையும் பிறகு முழுப் பத்திரிகையையும் விரும்புவார்கள். இதில் சில விஷயங்கள் இந்திய நங்கைமாரால் எழுதப்பட்டிருப்பது அவர்களுக்கு நூதனமாதலால் இன்பம் தரும். அவர்களுள் ஒருவர் பிறரால் நன்கு அறியப்பெற்ற நூலாசிரியை.

இந்தப் பத்திரிகை வெளிவரும் இக்காலம் ஆங்கிலருக்கு இளவேனிற்காலம். இது இந்தியாவிற்போல முதிர்வேனிற்காலத்திற்கு முந்தியல்ல பிந்திவரும். அப்போது ஆடவரும் மாதரும் வெயிற்பயமில்லாமல் சென்று உலாவி நூதன பூண்டு புஷ்பங்களைத் தேடிப் பெறுவார்கள். அவ்வாறே இந்த அக்டோபர் பத்திரிகையிலும் வாசிப்போர் பெரும்பாலாருக்கு நூதனமான விஷயங்கள் வரும். இங்கிலாந்தில் அபரிமித கைத்தொழில் நடாத்தும் ஒரு நகரைப்பற்றின விஷயமும் இந்தியநங்கை ஒருவர் கிறிஸ்து ஜயந்தியைப்பற்றிச் சொல்லும் சங்கதியும் இதில் வரும். இவற்றுடன் சாவித்திரி கதையும் சேர்ந்து இந்தப் பருவகாலத்தில் நம் பூங்காவனத்தில் நீங்கள் பார்க்கிற புதுப் புஷ்பங்களாகும். சில பூண்டுகள் வருஷ முழுமையுமே காணக்கிடைக்கிறதுபோலவே, தையற்பாடமும், நக்ஷத்திரங்களைப்பற்றிய சல்லாபமும் நம் மகா ராணிமார் சரிதங்களும் இதில் முன்போலவே இனி வெகுநாள் வரப் பார்ப்பீர்கள்.

'நம் மகா ராணிமார்' பாகத்தில் 'பெரிய வெள்ளை இராணியார்' என்று நம் இந்தியாவில் அரைநூறுண்டுக் கதிகமாய்ப் பெயர் விளங்கப்பெற்ற நன்குமதிப்புக்குரிய விக்டோரியா ராணியாரின் சரித்திரம் வரும். விக்டோரியா இராசாத்தி மற்ற ஆங்கில மகுடமன்னரிலும் அதிகமாய் இந்தியாவுக்குரியவர். அவர்களே நம் தேசத்து முதல் மண்டலேஸ்வரி. தவிர, நம்மாதர்களுக்குக் கனமும் ஒளியும் சுயாதீனமும் அருளுவதில் முன் நின்று மகோபகாரியாய் விளங்கினவரும் அந்தச் சக்கரவர்த்தினியே. அவர்களிடத்தில் நிலவிய மேலான குணங்கள் நம் இந்தியாவுக்கு ஒரு நிதியாயின. எவ்வாறெனில், மாதர்க்குரிய சிறப்புகளும் ஜீவகாருண்யமும் அன்புடைமையும் வடிவெடுத்த மகா மண்டலேஸ்வரி அவரே என்று நம் தேசத்தில் கல்வியறிவு நாகரீகம் ஓங்காத ஈனஜாதிகளுள்ளும் அவரைக்குறித்துப் பேச்சு நடமாடுகின்றது. அவர் மரித்த செய்தி கேட்டதும் நம் இந்தியாவில் ஒரு குப்பக்காட்டாள் 'ஐயோ, ஐயோ, உலகமாதா இறந்துவிட்டார்களாமே' என்று அலறி அழுதுகொண்டு ஓடினளாம்.

அப்பேர்ப்பட்ட மாதிரியை வியந்து கொண்டாடுவதே போதுமானதல்ல. அதைப்பற்றியொழுகுவதே சிறப்பு. நம் 'பெரிய வெள்ளை இராணியார்' வைத்துப்போன மகா சிறந்த மாதாமாதிரியையும் ஸ்திரீ குணச்சிறப்புகளையும் நாமும் நம்மாலான மட்டும் கடைப்பிடிக்கப் பிரயாசப்படவேண்டும்.

உங்களுக்குச் சகல நன்மையுமுண்டாக வாழ்த்துகிற உங்கள் பிரியை.

பத்திரிகாசிரியை.

MADRAS

The Garden of the Heart.

Edited by Miss Dewar.

VOL. I. • OCTOBER, 1912. • No. 4.

To our Readers.

Dear Sisters—

YOU will be glad that *The Garden of the Heart* has reached the last quarter ot its first year. May it go on for many years through an ever-widening area of circulation, until it reaches all the ladies of India and Ceylon! But this cannot be achieved unless each subscriber to the "Garden" will make it known to her friends. A great deal can be done by passing on back numbers to others, for in this way ladies will become interested in the stories which are not completed in one number and will wish to read them to the end. It may be a pleasant surprise to them to find that some of the articles are written by Indian ladies—one of whom is a well-known authoress.

This is the autumn number of our magazine. When it reaches you the great heat of summer will have gone, and it will be possible to walk amongst the trees even at mid-day. The cooler weather brings forth many new kinds of plants and flowers, so some of the articles in this October number will treat of things new to many of our readers. You will be interested to hear of one of the busiest manufacturing towns in England, and to know what an Indian lady has to say about Christmas Day, which will have passed before our next number appears. These accounts, together with the beautiful story of Savitri, are as the new flowers of the season. But some plants grow all the year round, so in our pages we shall always look for the chapter on needlework, and for a long time to come we hope to listen to the talk about the stars and to hear about our Queens.

The subject of our chapter in the "Our Own Queens" series is the life of the beloved Queen Victoria, who was known all over India as "the Great White Queen" for more than half a century. Queen Victoria belongs in a special way to India. Its first Empress, her Majesty was also its friend and benefactress, for with her reign began the new era of honour, light, and liberty for the women of India. Her personality is the country's possession, for even in its most distant and darkest places the people know and reverence her name as a synonym for all that is gracious and womanly and pure and good. At the time when the news of her death reached India, a village woman was heard to say as she went weeping and wailing along the dusty road, "Alas! alas! the mother of the world is dead!"

Such an example is given us, not only to admire from afar, but to follow. Dear Sisters, let us each in our own small way try to follow the lofty and pure ideal of motherhood and womanhood given us by our "Great White Queen."

With best wishes,

I am, your affectionate friend,

THE EDITOR.

Her Majesty Queen Victoria.

OF all the great and noble women whose names are held in universal honour, one of the greatest and noblest was the good Queen Victoria, who for more than sixty years reigned over the British Empire. Her father died when she was quite a child, but she was carefully trained and educated by her devoted mother, the Duchess of Kent. Queen Victoria ascended the throne on the death of her uncle, King William IV, when she was only eighteen years old. In 1838 she was crowned in Westminster Abbey, and in 1840 she married Prince Albert of Saxe-Coburg and Gotha. For nearly twenty-two years after her marriage, Queen Victoria's life was a very happy one. Her husband was a noble prince, who did all he could to help her in her difficult position of Queen-Empress of so great an Empire. Four sons and five daughters were born to them, and nowhere in the world could a more affectionate and happy family have been found. Until the year 1861 the Queen had known no great sorrow, but in February of that sad year her mother died, and in December the Prince Consort, known as Albert the Good, also passed away, after a short illness, leaving the broken-hearted Queen in lonely widowhood.

Her Majesty Queen Victoria.

In after years, three of her children were also taken from her, and two of her daughters were left widows like herself. She lived to see a large family of grandchildren and great grandchildren growing up around her who were the delight of her old age, and she possessed to the last the heart-felt devotion and loyalty of her subjects in all parts of the world.

What was the secret of the far-reaching influence and power of this beloved Queen? In the first place, she was a truly God-fearing woman; and God has said in His word, "Them that honour me I will honour." When the news was brought to her that her uncle was dead, and that she was Queen, almost her first words were to ask the Archbishop of Canterbury to kneel down and pray for her; and in those days she was in the habit of rising early to read the Word of God and seek guidance in prayer before the business of the day began. In later life, whenever the Queen journeyed by train, a copy of the Bible was always placed on the table in her carriage. She often gave presents of the Holy Book to princes and people from other lands who were not Christians and had not, perhaps, read it, and she often spoke of it as "the secret of England's greatness." After the death of the Prince Consort she used to go every

விக்டோரியா மகாராணியார்

இப்பூமண்டலமெங்கும் பிரக்கியாதியாய்ப் பேரெடுத்த மகோத்தமிகளில் மூந்தின வரிசையில் வைக்கத்தகுந்தவர்களுள் பிரிட்டிஷ் இராச்சியத்தில் நீதி வழுவாமல் அறுபது வருஷங்களுக் கதிகமாய் ஆண்ட விக்டோரியா மகாராணியார் ஒருவர். அவருடைய பிதா அவர் மிக இளந்தையாயிருந்தபோதே மரித்ததினால் அவருடைய தாயாராகிய கென்டு டச்செஸ் பிராட்டியார் அவரை மிகுந்த கவலையுடன் கல்வி கற்பித்து சுகுணங்களில் பழக்கினார்கள் அவருடைய சிறிய தகப்பனாகிய 4-ம் உவில்லியம் அரசர் காலகதியான பின் அவர் சிம்மாசனமேறினார். அப்போது அவருக்கு 18 பிராயம். 1838-ம் ௵ உவெஸ்ட் மினிஸ்டர் ஆபே ஆலயத்தில் அவர் மகுடம் சூட்டப்பெற்றார். 1840-ம் ௵ அவர் ஸாக்ஸே கோபுர்க் கோத்தா நாட்டின் அரசன் மகனாகிய ஆல்பெர்ட்டு ராஜகுமாரனை மணம்புரிந்துகொண்டார். விக்டோரியா மகாராணியார் தம்பதியுடன் கூடி 22 வருஷம் மங்களமாய் வாழ்ந்திருந்தார். அவருடைய நாயகர் மிகச் சிறந்த சீலங்கள் நிறைந்தவர். இராணியார் பென்னம்பெரிய பிரிட்டிஷ் மண்டலத்தின் இராச்சிய பாரத்தைச் சுமப்பதில் அவருக்கு அந்த மகா புருஷன் புரிந்த உதவி மிகப் பெரிது. அவர்களுக்கு 4 ஆண்மக்களும் 5 பெண்மக்களும் பிறந்தார்கள். பிதா மாதா புத்திர புத்திரிகள் அவர்களை யொப்ப அன்பும் அந்நியொந்நியமும் பொருந்தி வாழ்ந்தவர்கள் மிகச் சிலரே யாவர். 1861-ம் ௵வரையும் இராணியாருக்குப் பெரிய துக்கம் நிகழ்ந்ததில்லை. அந்த ஆண்டின் பெப்ருவரியில் அவருடைய அன்னையாரும் டிசெம்பரில் அவருடைய பிராணநாயகரும் மரித்ததினால் இராணியம்மாள் தனித்துவிடப்பட்டுத் துயருள் ஆழ்ந்தார்கள். அதற்குப் பல வருஷங்களுக்குப் பின்னர் அவர் தம் பிள்ளைகளில் மூவரை மரணத்திற்குக் கொடுத்துத் தம் புதல்விகள் இருவர் வைதவ்விய மடைதலாகிய தௌர்ப்பாக்கியத்தைக் காணலுற்றார். பேரன் பேர்த்திகள், அவர்களுடைய பிள்ளைகள் ஆகிய பெருங் குடும்பத்தினைக் காணும் பாக்கியமும் அவருக்கு உண்டாயிற்று. அவர்கள் எல்லாரும் அவர் பக்கத்தில் வளர்ந்து அவருக்கு மிகுந்த மனமகிழ்ச்சி விளைவித்தார்கள். உலகத்தின் நானா திசைகளிலும் உள்ள அவருடைய பிரசைகள் அவர்மேல் அத்தியந்தம் உள்ளக் கனிவான அன்பு [illegible] ஜபித்தும் அவருடைய கடைசி மூச்சளவும் பாராட்டினார்கள்.

இப்படி அன்பு பாராட்டப்பெற்ற மகாராணியம்மாளுக்குச் சகல இடங்களிலும் செல்வாக்கும் அதிகாரமும் ஓங்குவதற்குக் காரணமாயிருந்ததென்ன? முதலாவது, அவருக்கிருந்த உண்மையான தேவபக்தி; 'என்னைக் கனம்பண்ணுகிறவர்களை நான் கனம்பண்ணுவேன்' என்று தேவன் தம் திருவசனத்தில் திருவாய் மலர்ந்திருக்கிறார். அவருடைய சிற்றப்ப அரசன் மரித்த செய்தியை கன்டர்புரி அதிசிரேஷ்ட அத்தியக்ஷர் அவருக்குத் தெரிவித்தபோது அவர் தம்முடன் முழந்தாளிட்டு தேவனை நோக்கித் தமக்காகப் பிரார்த்திக்க அவரைக் கேட்டுக்கொண்டார். அந்நாட்களில் அவர் வெள்ளென எழுந்து, தினசரி வேலை துவக்குமுன் திருவசனத்தைப் படித்துத் தாம் தப்புத் தவறுகளில் போகாமல் தம்மைக் காக்க தேவனை வேண்டுகிற பழக்கம் அவருக்கிருந்தது. அதற்குப் பிந்தினகாலத்தில் அவர் புகைவண்டிப் பிரயாணம் செய்தபோதெல்லாம் அவர் இருந்த ரதத்தின் மேசைமேல் ஒரு திருவசனப் புத்தகம் எப்போதும் அவர் படிப்பதற்காக வைக்கப்பட்டிருந்தது. கிறிஸ்து பக்தரல்லாத புறத்தேச அரசர்களாவது ஜனங்களாவது தம்மைத் தரிசனங் காணவந்த பலதடவைகளில் திருவசன நூலை அவர்களுக்குப் பரிசளித்து 'இங்கிலாந்தின் மேன்மைக்கு அதுவே காரணம்' எனப் பேசினார். தம் நாயகர் மரித்தபின் அவருடைய பிராணன் பிரிந்த அறைக்குள் இரவுதோறும் போய் அங்கு தேவனுக்குமுன் முழங்காலிட்டுப் பிரார்த்திப்பது அவருக்கு வழக்கம். அவரிடத்தில் மிகச் சிறந்து விளங்கின இரண்டாமொரு உத்தம சீலம் துயரடைந்து வருந்துகிறவர்களுக்கு உருகின உள்ளமும் அதை அவர்களுக்கு வெளிப்படுத்தின அநுதாபச் செயல்களும் எனச் சொல்லவேண்டும். தம் பிரசைகளில் யாருக்காவது துக்கம் சம்பவித்ததை அவர் கேள்வியானால் அதை அவர்களுடன் பகிர்ந்துகொள்வது அவருக்கு வழக்கம். தம் பென்னம்பெரிய இராச்சிய மண்டலத்தில் எங்கேனும் ஒரு பெருந் தீமையாவது உயிர்நாசமாவது நிகழ்ந்ததாக அவருக்குத் தெரிந்தவுடனே அவர் தம் பரிதாபமுள்ள உள்ளத்தின் அநுதாபத்தை

night into the room in which he died, and there she would kneel and pray to God. Then, secondly, she was *tender-hearted and sympathizing.* No sorrow ever touched her people which the Queen did not share, and whenever she heard of a sad accident or catastrophe in any part of her Empire she would send messages of sympathy, and do all she could to help the sufferers. When her troops were engaged in war in any quarter of the world, the sufferings of the soldiers weighed so heavily on her Majesty that she could not sleep, and when any wounded men were brought home, she visited them in the Hospitals and wept by their bedsides as if they had been her own sons. Thirdly, she was so *wise* and *good* that she won the respect and admiration of all foreign sovereigns, and her character was an example to them as well as to her own subjects.

It was a sad day, indeed, for the British Empire when the aged Queen was at last called to her rest, after her long and glorious reign. Most of her subjects had known no other Sovereign, and it seemed to them as if the glory of the Empire had departed with their noble Mother-Queen, but the God whom she served has still been with us, and will continue to bless us if we follow her example and seek first to know and do His will and to glorify Him in all our ways.

Love and Death.

A Story from the Mahabharata.

I.

LONG ago, in the days of the Vedas, there was a king called Dyumat-sena, who ruled over a mighty kingdom in peace and prosperity, showing justice and mercy. But in his old age blindness fell upon him, and his enemies drove him forth, with his wife and infant son, to take refuge in the jungle.

There, in a lowly hermitage, the young prince, Satyavan, grew into a tall and noble youth, the pride of his parents, and admired by all who knew him for his courage and virtue and skill in every manly art. Humble as was the forest home, it was happier than many a palace; for love and peace filled the hearts of the three who dwelt there together.

Now about the same time there reigned over the kingdom of Madras another aged and virtuous monarch, named Aswapati. Through long years Aswapati and his wife had prayed continually that an heir might be given them, for they were childless. At last their prayers were answered, and there was born to them a beautiful baby-girl. Then loud rejoicings went up throughout the land; for in those days a girl was not despised and held of small account, but was loved and cherished.

Surrounded by care and tenderness, the princess Savitri grew up to maidenhood, fair and wise and good, so that there was none to equal her in all the land. But because she was the daughter of so great a king, no suitors dared to ask her hand in marriage.

Now when Aswapati saw this he called his daughter to him, and said to her, "Savitri, the time is come when thou shouldst be joined in wedlock to a noble husband. Go forth, therefore, oh, my daughter, and seek for one who shall be worthy of thy heart's love, and the blessing of thy father shall seal thy choice."

Then the meek and gentle Savitri bowed down before the king, saying, "I will do according to thy word in all things, my father."

மின்செய்திமூலமாய்த் தெரிவித்து அந்த ஆபத்துகளால் கஷ்டப்படுகிறவர்களுக்குத் தம்மால் இயன்ற சர்வ ஒத்தாசையும் செய்தார். அவருடைய சைந்நியங்கள் எந்தப் பூபாகத்திலாவது யுத்தம்செய்து கஷ்டப்படும்போது அவர் மனம் உலையிலிட்ட மெழுகுபோலிருந்ததினால் அவருக்குக் கண்ணுறக்கம் வராது. காயப்பட்ட போராட்கள் தம் தேசத்திற்குக் கொணரப்பட்டபோதெல்லாம் அவர்களை ரணவயித்தியசாலைகளில் நேரில்போய்க் கண்ணோடி அவர்களுடைய அவஸ்தையைச் சகிக்க ஆற்றாமல் அவர்கள் தாம் பெற்ற மக்களாயிருந்தால் எப்படியோ அப்படி உருகியழுவார். ஞானமும் அன்புடைமையும் அவரில் சிறந்தோங்கின மூன்றும் பெரிய சீலம் எனச் செப்பலாம். அவருடைய ஞானத்தையும் நற்குண சீலத்தையும் கண்டு வேற்றரசர் யாவரும் அவரிடத்தில் மிக வியப்பும் பெரிய நன்குமதிப்பும் பாராட்டினார்கள். அவருடைய குணசிரேட்டம் வேறு நாட்டு மன்னர்களுக்கும் தம் சுயபிரசைகளுக்கும் நன்மாதிரியாய்த் துலங்கிற்று.

மிக வயசு தளர்ந்திருந்த அந்த மண்டலேஸ்வரி கடைசியாக யாவரும் போகவேண்டிய பிரகாரம் இளைப்பாறப் போனபோது, அவர் மிக நீண்ட காலம் புகழோங்க ஆளுகை செய்துபோயிருந்தும் பிரிட்டிஷ் இராச்சியவர்த்தம் முழுமைக்கும் ஆற்றொண்ணா விசனம்வந்தது. அவருடைய பிரசைகளுள் பெரும்பாலார் அவருடைய ஆட்சியையன்றி வேறு அறியாதவர்களாதலால் மாதாவொத்த அந்த மகா மன்னவி மரித்ததும் இராச்சியத்தின் மேன்மையே அவருடன் போய்விட்டதாகப் புலம்பினார்கள். ஆயினும் அந்த இராணியார் சேவித்த தேவன் இன்னும் நம்முடன் இருக்கிறார். நாம் அவருடைய மாதிரியைக் கடைப்பிடித்து தேவனை அறிந்து அவர் திருவுள்ளத்திற்கு ஏற்ப நடந்து அவரை மகிமைப்படுத்துவோமானால் அவர் நம்மையும் ஆசீர்வதிப்பார்.

சதிபதி அன்பும் மரணமும்

மகா பாரதத்தின் ஓர் கதை

I

சதுர் வேதங்களும் உண்டான வெகு பூர்வீகத்தில் தியுமத்ஸேனன் எனப் பெயரிய அரசன் ஒரு பெரிய ராச்சியத்தை நீதி வழுவாமல் ஆண்டான். வார்த்தீபம் வந்தகாலத்தில் அவன் பார்வையிழந்ததினால் அவனுடைய பகைவர் அவனையும் அவனுடைய இராணியையும் சிசுப்பிராயமுள்ள அவன் மகனையும் காட்டுக்குத் துரத்திவிட்டார்கள். அந்தக் காட்டில் ஒரு எளிய குடிசையில் சத்தியவான் என்கிற அந்த அரசச்சிசு வளர்ந்து காம்பீர வடிவமுள்ள வாலிபனானான். அவனிடத்தில் சகல சுசீலங்களும் குடியிருந்தமையாலும் ஆண்மையும் வீர வித்தைகளில் விற்பன்னமும் நிறைந்திருந்தமையாலும் பெற்றவர்களுக்குப் பெருமையும் மற்றவர்களுக்கு மதிப்பும் அவனாலுண்டாயிற்று. ஆரண்யத்தில் இருந்த அந்தச் சிறு குடிசையில் வசித்த மூவருள்ளத்திலும் அன்பும் மனத்திருப்தியும் இருந்ததால் அது அவர்களுக்குச் சகல வைபவங்களுமிருந்த அரண்மனையைவிட மேலாகவே தோன்றிற்று.

அக்காலத்தில் இன்னொரு ராச்சியத்தில் அஸ்வபதி என்னும் வயோதிக ராசன் சுகுணமுள்ளவனாய் ஆண்டான். வெகுகாலம் பிள்ளையில்லாமல் அவனும் அவனுடைய இராணியும் பிள்ளைவரம் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் கேட்ட வரம் கிடைத்தபோது அவர்களுக்கு ஒரு மகள் பிறந்தாள். அந்நாட்களில் ஆண்மக்களைப்போலவே பெண்மக்களையும் அன்பாய்ச் சீராட்டி வளர்ப்பது வழக்கம் ஆதலால் அந்தப் பெண் பிறந்ததற்காக அந்நாடெல்லாம் மகோற்சவம் கொண்டாடிற்று. சீரும் செல்வமுமாய் வளர்க்கப்பட்ட சாவித்திரி என்ற அந்த அரசபுதல்வி அழகுடன் ஞானமும் அன்புடைமையும் பொருந்தினவளாய்ப் பக்குவதசை யடைந்தாள். ஆயினும், அந்த மிகப் பெரிய பதவியுடைய அரசனையடுத்து அந்த இராஜகுமாரத்தியை மணம்புரியத் துணிந்துவந்து கேட்பாரில்லை. அதைப் பார்த்து, அஸ்வபதி தன் மகளை அழைத்து: ‘சாவித்திரி நீ தக்க வரனுக்கு வாழ்க்கைப்படவேண்டிய வயதை யடைந்திருக்கிறாய்.

So Aswapati appointed trusty guards to accompany her, and, mounted in a golden chariot, Savitri went forth, through cities and villages, across vast plains and beneath spreading forests. Wherever she went blessings followed her for the alms which she gave to the poor, food to the hungry and clothes to the naked, and yet more for the gentle kindness which she showered on all. So months passed, until at length the princess stood again before King Aswapati, and with maiden blush and timid yet steadfast tones, told him that she had made her choice.

"High or low, in palace or temple, I have found none like the exiled prince, Satyavan. I choose him for my lord and husband."

Now there sat by Aswapati's side a holy man, and at Savitri's words he cried out, "Alas, for the choice of the princess! Sorrow and grief has she chosen for herself this day!"

"Wherefore?" asked Aswapati. "Is not Prince Satyavan a noble youth, brave and gentle, duteous to his parents, just and kind to man and beast?"

And the holy man answered, "He is all these things,—yet must not Savitri wed him; for it is decreed by heaven that upon this day a year hence the prince shall die."

Then the king exclaimed in horror, "Never may the doom of widowhood fall upon my child! Oh, Savitri, bow before the decree of Heaven. Choose another and happier bridegroom!"

Softly and sadly she made answer, "My father, it has ever been my delight to obey thee in all things; but a maiden cannot give her love twice. For joy or sorrow, for long life or for short, my heart is Prince Satyavan's. Seek not to alter my choice, but give me thy promised blessing, and leave the rest to Heaven!"

Then said the holy man, "Oh, king, hearken to her words, for her heart is fixed and will never change. Let her wed him whom she hath chosen—and leave the rest to Heaven."

So Aswapati did as the holy man counselled, and blessing his daughter with tears, let her go forth to the jungle as the bride of Prince Satyavan.

In the forest home a year slipped by peacefully and happily. Day after day the love of the prince for his bride grew deeper and stronger, as he saw how dutifully she tended his mother, and waited, daughter-like, upon the blind old king. And Savitri never missed the splendour and luxuries of a palace, but rejoiced in the simple life of the forest.

Yet a secret load weighed upon her, for daily she recalled the words of the holy man; and as the year wore on she fasted and prayed continually, until the fatal day dawned at last. Fear was heavy upon her as she rose that morning; but calmly and silently she went about her common tasks, saluting the aged king and the forest Brahmans. And like rain upon the thirsty ground, fell upon her ears the Brahmans' morning greeting, "May'st thou never be a widow!"

Now that day Prince Satyavan was going into the depths of the jungle to cut wood, and Savitri begged that he would take her with him.

"Nay, beloved," he answered tenderly, "for the way is long and hard, and thou art pale and worn with fasting."

"Let me go with thee!" she pleaded. "Toil is no toil when thou art by me. Gracious husband, never before have I asked of thee any boon. Deny me not this!"

So he yielded, and side by side they went forth into the depths of the forest. Gaily Satyavan wielded his axe, fearing no evil, till, on a sudden, deadly faintness came upon him, and he sank to the ground. In an agony of grief and terror, Savitri knelt beside her husband, but there was no answer to her loving words, and as she looked upon his face, it seemed to her that the shadow of death rested on it.

(*To be continued.*)

நீ போய் உன் சதியன்புக்குப் பாத்திரனாகிய ஒரு பதியைத் தேடிவா. உன்னையும் உன் வரனையும் நான் ஆசீர்வதிப்பேன்' என்றான். அதற்கு அந்தத் தந்தை வாக்குக் கடவாத சாவித்திரி என்னைப் பெற்ற அருமையப்பா, தங்கள் திருவாக்குப் பிரகாரமே நடந்துகொள்ளுகிறேன் என்று மிகப் பணிந்து சொன்னாள். அஸ்வபதி அவளுக்குத் தக்க துணைப்படை கூட்டி அவளை ஒரு தங்கரதத்தில் ஏற்றி அனுப்பினான். அவள் நாடுகள் நகரங்கள் காடுகள் கரம்புகள் எல்லாந் திரிந்துபோயினாள். அவள் போனவிடமெல்லாம் ஆதுலர்க்கு அன்னமும், ஏதிலார்க்குப் பொருளும், உடையில்லார்க்கு உடையும், யாவருக்கும் பட்சமும் விழங்கிக் கொண்டே போயினாளாதலால் யாவரும் அவளை மங்களவாழ்த்து வாழ்த்தினார்கள். இப்படிச் சில மாதங்களானபின் சாவித்திரி தான் போன காரியம் சித்தித்ததெனத் தன் பிதாவுக்கு அறிவித்தாள்.

'சத்தியவானுக்கு நிகராய் ஒரு ஆண்மகனை மேலோர் கீழோர் ஆன எவரில்லத்திலும் நான் கண்டதில்லை. அவனையே எனக்கு வரனாகத் தெரிந்துகொண்டேன்' என விண்ணப்பம் செய்தாள். அவ்வேளையில் அஸ்வபதி யண்டையிருந்த ஒரு திரிகாலஞானி எழுந்து 'இராஜகுமாரத்தி தெரிந்துகொண்ட வரனால் அவளுக்குக் கரையில்லா துக்கம் வரும்' என்றான். அஸ்வபதி 'அது ஏன்? சத்தியவான் ஆண்மையும் அடக்கமும் மேன்குணங்களுமுள்ள பிள்ளையல்லவா? அவன் தன்னைப் பெற்றவர்களுக்குக் கடமை தவிராமல் நடந்துகொண்டு மானிட உயிருக்கும் மிருக உயிருக்கும் அன்பும் ஆதரவுமாயிருக்கவில்லையா?' என வினவ, அந்த இருடி 'அந்த எல்லாச் சிறப்புகளும் இருந்தும் சாவித்திரி அவனை மணமாடலாகாது, இற்றைக்கு ஒரு வருஷக்கெடுவில் அவன் மரிப்பான் எனத் தெய்வம் விதித்திருக்கிறது' என்றான். அதுகேட்டுத் திடுக்கிட்டு 'என் மகள் ஒருநாளும் வைதவ்வியமடையலாகாது. தெய்வம் விதித்ததை யறிந்திருக்கிற மகளே, வேறொரு நற்சகுனமுள்ளவனை வரனாய்த் தேடு' எனறு அஸ்வபதி சாவித்திரிக்குச் சொன்னான். அதற்கு அந்த மாதரசி: 'என் பிதாவே, தங்கள் ஆணையை எந்நாளும் மனோற்சாகமாய் நிறைவேற்றுவதே எனக்குப் பிரியம் என அறிவீர்கள். ஆயினும், ஒரு கற்புடைய கன்னி தன் உள்ளத்தின் அன்பை ஒரு வரனுக்குக் கொடுத்தபின் அதை எடுத்து வேறொருவனுக்குக் கொடுக்க ஏலாது. சந்தோஷமோ துக்கமோ, நீண்ட ஆயுசோ அற்பஆயுசோ, எது வந்தாலும் சரி, என் சதியன்பு சத்தியவானுக்கே யுரிமையுள்ளது. அதைத் தடுக்காமல், தாங்கள் திருவாக்குப்பண்ணின தங்கள் பிதா ஆசீர்வாதத்தை எனக்கு அருளுங்கள். அப்பால், தேவன் திருவுள்ளப்படி நடக்கிறது நடக்கட்டும்' என்றாள். அதைக்கேட்ட இருஷியானவர்: 'அரசனே, அவள் சொற்படி நடத்து. அவள் தன் உள்ளத்தின் நினைவை மாற்றமாட்டாள். அவள் தெரிந்துகொண்ட வரனையே வரிக்கட்டும். மற்றதைத் தேவகடாக்ஷத்திற்கு விடு' என்றார். அதன்மேல் அஸ்வபதி அந்தப் பெரியவர் வாக்குக்கு இணங்கி, தன் மகளைக் கண்ணீருடன் ஆசீர்வதித்து, சத்தியவானுக்கு மனையாட்டியாக ஆரணியத்திற்கு அனுப்பிவிட்டான். அந்த ஆரணியத்தில் மனதிற்கு மிக இன்பமாகவே ஒரு வருஷம் கழிந்தது. தன் மனைவி கண்ணில்லாத தன் தகப்பனுக்கு மகளிலும் அதிகமாய்ப் பாராட்டின அன்பையும் தன் தாய்க்கு வணங்கிச்செய்த பணிவிடைகளையும் பார்த்து அவளுடைய பதிக்கு அவள் மேலிருந்த அன்பு நாளுக்குநாள் அதிகரித்தது. அதனால், தன் தகப்பனுடைய அரண்மனையைவிட்டுக் காட்டில் வாசம் செய்தது அவளுக்கு ஒரு பொருட்டாயிருந்ததில்லை. அவளுடைய உள்ளத்தில்மாத்திரம் இரகசியமாய் இருந்த பயம் போகவில்லை; இருஷி சொன்ன ஒரு வருஷக்கெடு நெருங்க நெருங்க அவள் ஓயாமல் உபவாசமும் ஜெபமும் செய்வதில் கருத்துவைத்திருந்தாள். அந்தக் கெடு முடிந்து ஆபத்தான நாள் விடிந்ததும் அவள் விழித்து எழும்போதே திகிலுடன் எழுந்தாள். ஆயினும் மனதை அடக்கிக் கொண்டு வழக்கப்போலவே செய்கிற சகல வேலையும்செய்து, தன் முதிர்ந்த வயதுள்ள மாமனாரையும் வனத்துப் பிராமணரையும் நமஸ்காரம் பண்ணினாள். அந்நாட் காலையில் அவளுடைய நமஸ்காரத்திற்கு அவர்கள் அளித்த 'என்றும் சுமங்கிலியாயிரு' என்கிற ஆசீர்வாதம் வறண்ட நிலத்தில் மழைபோல் அவள் காதில் விழுந்தது. அன்று சத்தியவான் விறகுவெட்டிவர நடுக்காட்டுள் போக யத்தனிக்கையில் தன்னையும் கூட்டிப்போக சாவித்திரி அவனை வருந்தினாள். அவன் 'என் மனதிற்கினிய மனையாளே! வழி நடக்க நடக்கத் தொலையாது, நடப்பும் லேசல்ல, நீ உபவாசத்தினால் உடம்பிளைத்திருக்கிறாய். வருவது உசிதமல்ல' என அன்பான மொழிகளால் தடுத்தும், அவள்: 'நான் உம்மோடு வர இடங்கொடும். நீர் என் அருகில் இருக்க நடைவருத்தம் எனக்கொரு வருத்தமாகாது.

Manchester.

MANCHESTER has claims to be considered the second city in the British Empire, and is not easy to deal with in "a few words." Its importance is chiefly commercial, for it is the centre of the great cotton industry, importing raw material from the fields of America and Egypt, manufacturing it in the great mills of the Lancashire district, and then sending cloth all over the world, and especially to India.

We are speaking, in this paper, of present-day Manchester; but we must not forget that the city has a long past history, for in parts of the town are still to be seen traces of buildings which existed when the Romans were in Britain. If we look at the map we see that Manchester is about thirty miles from the west coast of England, and is, therefore, an inland city. But in this generation it has been connected with the sea by a Ship Canal cut through to the river Mersey. This canal is a great triumph of engineering, and has had a great influence on the industries of Lancashire. The present writer well remembers the coming of Queen Victoria to Manchester to open the great water-way along which the world's merchandise now enters and leaves our gates; and it must be admitted that a city has enterprise when it, for the sake of its trade, cuts its way to the sea.

Another great engineering work must be mentioned. We are sixty or seventy miles from what we call the Lake District, and from Thirlmere, a beautiful lake lying at the foot of one of our highest mountains, we have laid three pipes which bring to us pure water to quench our "million-throated thirst." Enough has been said to show that Manchester people are a business people. Visitors to Manchester often go into our Royal Exchange at the busiest hours in the week, and there they see men conducting business which links England, through Manchester, to the ends of the earth.

But it would not be fair to produce the impression that Manchester has no other interests than her trade, and the making of money. She has a fine and ancient Cathedral Church; a modern and very progressive University, and one of the largest Infirmaries in the world, built in the reign of our late king, and opened by him in person. She has more than one picture gallery, and her citizens have a reputation for knowing and loving what is best in musical and dramatic art. The Rylands Library, in one of our main streets, contains a unique collection of books, including a priceless set of English Bibles. Nor must we forget the headquarters of the government of the city, the Town Hall. It is a building of great size and much architectural detail, standing in one of our great public squares, in which are statues of the late Prince Consort; Bishop Fraser, the second Bishop of Manchester; Mr. Gladstone and Mr. Bright, two great statesmen; and Mr. Oliver Heywood, one of Manchester's worthiest citizens. In the Town Hall the Lord Mayor and the Council meet once a week to conduct the city's business; and in the same buildings are the head offices of the Gas, Water, Electricity, and Police departments. There are many public parks in the city, but our atmosphere is so smoke-laden that it is only by skilled attention and at much cost that we can rear healthy trees and bright flowers. The city is somewhat murky and its streets are noisy; and the manufacturing district of which it is the centre is so wide that it has not the beautiful suburbs of many other large towns. The name of Manchester, all the world over, stands for commerce, and the city is one of the busiest places in the world. We who live here feel the absence of beauty in our surroundings, but we are proud of our importance to the trade of the world, and we believe that the existence of our city is beneficent as well as busy.

அன்புடை நாயகா! இதற்குமுன் நான் உம்மை எந்த வரமும் வேண்டினதில்லை. இந்த ஒரு வரம்மாத்திரம் தடையின்றித் தர வேண்டுகிறேன்' என்றாள். அதற்கவன் இணங்கி, நடுக்காட்டுக்கு அவளை அழைத்துப்போய் எந்த ஆபத்தும் வரும் என்கிற நினைவேயில்லாமல் மனமகிழ்ச்சியுடன் விறகு வெட்டினான். அந்நேரத்தில் திடீரெனச் சோபம் உண்டாகி நிலத்தில் சாய்ந்தான். பயமும் துக்கமும் மேலிட்டு சாவித்திரி அவனை அணுகி பல பிரியவசனங்கள் சொல்லிக் கூவியும் அவன் ஒன்றுஞ் சொல்லாமையினால், அவனுடைய முகத்தை உற்று நோக்கி அதில் சாவுக்குறிகளைக் கண்டாள்.

(தொடர்பு இனிவரும்.)

மஞ்சேஸ்டர் நகரம்

மஞ்செஸ்டர் பிரிட்டிஷ் மகா மண்டலத்தில் இரண்டாம் மகா நகர் என்னத்தகும். அதை இரண்டொரு சொல்லால் வர்ணிக்க முடியாது. வியாபாரமே அதின் முக்கியத்துக்குக் காரணம். பருத்தி நெசவு அதில் நடக்கும். பருத்தி விளைகிற அமெரிக்கா, எகிப்து, இவ்விடங்களிலிருந்து பஞ்சுப்பொதி ஏற்றிவந்து லங்காஷீர் மாகாணத்தின் பெரிய பெரிய ஆலைகளில் நூற்று நெசவு செய்து உண்டாகிற துணிகளை உலகெங்கும் முக்கியமாய் இந்தியாவுக்கும் அனுப்புவார்கள். மஞ்செஸ்டர் வெகு பூர்வங் கண்டது. அதின் சிற்சில பாகங்களில் உரோமர் பிரித்தானியரை யாண்ட காலத்துக் கட்டடங்கள் அகப்படும். பூமி யுருவப் படத்தில் பார்த்தால் மஞ்செஸ்டருக்கும் கடலுக்கும் சுமார் 30 மைல் தூரம் இருப்பது தெரியும். ஆகவே அது துறைமுக நகரமல்ல என்பது பெறப்படும். ஆயினும் நம் காலத்தில் அதற்கும் மெர்ஸிநதி முகத்துக்கும் ஒரு பெரிய கப்பல் போகக்கூடிய கால்வாய் வெட்டி அதைத் துறைமுகமாக்கினார்கள். இந்த வெட்டுவாய்க்கால் இஞ்சினீயர் வித்தைத் திறத்தைக் காட்டும் பெரிய உதாரணங்களுள் ஒன்று. உலகத்தின் பெரிய வியாபாரம் இங்கிலாந்துக்கு வரவும் போகவும் உதவுகிற இந்த மகாப் பெரிய நீர்ப்பாதையை விக்டோரியா மகாராணியார் மஞ்செஸ்டருக்கு வந்து திறந்துவிட்ட வைபவம் இந்த வியாஸத்தைப் பிரசுரிக்கிற வியாஸ ஆசிரியர் நேரில் பார்த்தது. தன் வியாபாரம் தழைக்கும்பொருட்டுக் கடலுடன் தனக்கு இப்படியொரு சம்பந்தம் ஏற்படுத்திக் கொண்ட நகரம் மிக முயற்சியுள்ள நகரம் என்று சொல்லவும் வேண்டுமோ? இன்னொரு பெரிய இஞ்சினீயர் சிறப்புவேலையும் அதில் காணலாம். மஞ்செஸ்டருக்கும் ஏரிகள் செறிந்த மாகாணத்திற்கும் அறுபது எழுபது மைல்தூரம் உண்டு. இங்கிலாந்தின் உயர்ந்த மலைகள் ஒன்றின் அடிவாரத்தில் திரல்மீர் என்ற தெண்ணீர் ஏரி இருக்கிறது. அதிலிருந்து மஞ்செஸ்டருக்கு நல்ல தண்ணீர் கொண்டுவர மூன்று நீர்த்தூம்புகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மஞ்செஸ்டருக்கும் உலகத்தின் ஈறுங் கடைசிக்கும் வியாபார சம்பந்தம் உண்டு என்பதை அந்நகரின் ராயல் எக்ஸ்சேஞ்சு என்ற உண்டிமாற்றுக் கட்டடத்திற்குப் போய்ப் பார்த்தால் தெரியும்.

வியாபாரம் செய்வதும் திரவியம் தேடுவதும் மாத்திரமே மஞ்செஸ்டர் நகரின் சிறப்பு என்பது சரியல்ல. அதில் வெகு பூர்வமுள்ள ஒரு பெரிய ஆலயம் உண்டு. மேலும் நூதனமாய் ஏற்பாடாகி அதிதீவிர விருத்தியடைகிற ஒரு சர்வகலாசாலையும் அங்கே இருக்கிறத. உலகத்தில் பெரிய வைத்தியசாலைகளில் ஒன்றும் அவ்விடத்தில் நிலவுகின்றது. அது ஏழாம் எட்வர்ட் மன்னரின் காலத்தில் கட்டப்பட்டு அவராலேயே பிரதிஷ்டை செய்யப்பெற்றது. கீர்த்திபெற்ற படங்கள்வைக்கிற இரண்டு படச்சாலைகளும் அங்குண்டு. சங்கீதவித்தையிலும் நாடகவித்தையிலும் நுணுக்கம் அறியவல்லார் என்கிற சிறப்பு அந்நகரத்தாருக்குக் கிடைத்திருக்கிறது. ரைலான்ட்ஸ் புத்தகசாலை என்கிறது இந்நகரின் ராஜவீதிகள் ஒன்றிலிருக்கிறது. அதில் விசேஷ சிறப்படைந்த புத்தகங்களும், பற்பல காலங்களில் பிரசுரிக்கப்பட்ட இங்கிலீஷ் வேதபுத்தகங்களின் விலைமதிக்கமுடியாத சேர்ப்பும் காணக்கிடைக்கும். அந்நகராதிகாரம் வீற்றிருக்கும் தலைமை ஸ்தானமாகிய டவுன் ஹாலைச் சொல்லாமல் விடப்படாது. அதொரு பென்னம் பெரிய கட்டடம். சிற்ப இலக்கணச் சிறப்புகள் அதில் மிக விளங்கிக் கிடக்கும். அதிருக்கிறது

Needlework Patterns.

(From the "Girl's Own Paper.")



1.—A Lacy Edge.

Use Manlove's No. 36 lace thread.

This is worked upon a foundation chain, the length required, or into hem-stitching, or feather stitch braid.

First Row—Make a double chain into foundation, then chain 12 to form a loop, * double chain, chain 2, double chain, chain 2, double chain, chain 12. Repeat from *.

Second Row—Into first loop of 12 chain, make a loop of 16 chain * then chain 12, catch back into 5th to form a picot, chain 7, catch into next loop of 12 chain, chain 12, catch back into 5th chain 7, catch into next loop of 12 chain, and into this same loop make a loop of 16 chain. Repeat from *.

Third Row—* Into top of long loop make 3 treble, 5 chain, 1 long treble (thread twice over needle) 5 chain, 1 long treble 5 chain, 2 ordinary treble. Then chain 7, make 2 treble on the inner side of picot, and 2 more treble beside next picot, chain 7 and catch into next long loop. Repeat from *.

Fourth Row—* In the first 5 chain, make 5 treble, in the next put 7 treble, and into the next 5 treble. Then chain 12, catch back into 5th for picot, chain 7, catch between the two sets of treble in row below, chain 12, picot, chain 7. Repeat from *.

Fifth Row—Over each 5 treble make 5 chain with 7 chain over the 7 treble, 2 double chain in the chain nearest the treble on each side, and 7 chain between them.

Sixth Row—Fill the 5 chain with 5 double chain. Into the 7 chain make 3 ordinary treble, 4 long treble, 3 ordinary treble. Fill in the intervening 7 chain that bridges the scallops, with 4 double chain, 5 chain, 4 double chain.

2.—Narrow Irish Insertion.

Chain fourteen and catch in the fourth chain from the needle for a picot. Chain six and catch in the fourth chain from the needle for a picot, chain two, and make one single crochet in the fifth chain made in beginning the work. Chain six and catch for a picot, chain six and picot, chain two, make one single crochet in the first chain made on foundation.

Second Row—Chain three, turn, five double crochet in the first loop of preceding row, working them before the picot. Chain six and catch for a picot, chain six and picot, chain two, one single crochet in the first loop of preceding row, working it between the picots. Chain six and picot, chain six and picot, chain two, one single crochet in second loop of preceding row, between picots.

Repeat the second row for the length required, then work down each side of the insertion as follows:

One single crochet in the centre of first shell, * chain three, one single crochet in the picot between shells, chain three, one single crochet in the centre of the next shell. Repeat from * to end.

Second Row—Put four single crochet in each space, and fasten off.

ஒரு விஸ்தாரமான மைதானம். அந்த மைதானத்திலே விக்டோரியா மகாராணியாரின் நாயகருடைய சிலை, மஞ்செஸ்டரின் இரண்டாம் அத்தியக்ஷகுருவான பிரேஸருடைய சிலை, பிரக்கியாதிபெற்ற இராச்சிய பரிபாலகர்களான கிளாட்ஸ்டொன், பிரைட், என்றவர்களுடைய சிலை, மஞ்செஸ்டர் நகரார் பூஜிதையாய்க் கொண்டாடுகிற ஒலிவர் ஹேவுட் என்றவருடைய சிலை, இவை வைக்கப்பட்டிருக்கின்றன. டவுன் ஹாவில் நகராதிகாரியும் அவருடைய ஆலோசனைச் சங்கமும் வாரத்தில் ஒருமுறை கூட்டம்வைத்து அந்நகரத்தின் நடவடிகளை ஆலோசித்து நடத்துவார்கள். எரிவாயு (Gas), நீர், மின்சாரம், போலீஸ், இவற்றைப் பரிபாலனம்செய்யும் தரப்பார்களுக்கும் அந்த ஹாவிலேயே ஆபீசுகள் உண்டு. ஜனங்களுலாவ அநேக பார்க்குகள் இங்கிருந்தும், புகைப்படலங் கவிந்த இந்நகரில் வெகு பொருள் விரையஞ்செய்து கவனித்தாலன்றிச் சுகமான பூண்டுகளும் மரங்களும் புஷ்பங்களும் விர்த்தியாகமாட்டா. இந்த நகரத் தோற்றம் கரிபடிந்த தோற்றம், அதின் வீதிகள் பேரொலி நிரம்பியிருக்கும். கைத்தொழில் முக்கியம் உள்ள இந்த நகரத்திற்கு மற்றப் பெரிய நகரங்களுக்கு இருப்பதுபோல் சுற்றுப்பேட்டைகள் இல்லை. மஞ்செஸ்டர் என்று ' உலகில் எங்கு சொன்னாலும் அங்குள்ளார் மனதில் வியாபாரம் என்கிற நினைப்பே வரும். உலகில் தொழில் கதித்த நகர்களுள் மஞ்செஸ்டர் ஒன்று. அந்த நகரில் அழகு என்பதைத் தேடினால் அகப்படாது. ஆயினும், உலகத்தில் பேரெடுப்பான வியாபாரம் அதில் இருப்பதினால் அதை உலகிற்கு உபகாரமான நகர் என்பது பொருந்தும்.

A Talk about the Stars. Part IV.

We have been talking about these twelve groups in the sun's belt, and it is now time to tell you their names. We western people did not know anything of these things till they reached us from the east, but when we heard them



called by Oriental names we kept some of them that were easy to pronounce, while others we pronounced very badly, so badly that the old astronomers would never recognise them; but most of the names we put into our own language. So now I will give you the English names of the terms I have been using, and your own maulvies or pandits can give you the old names if you want them. The belt that the sun travels in is called the *Zodiac*, from a Khaldee or Old-Arabic word. All groups of stars, with the fields they are in, are called *constellations*, and those twelve *constellations* which are in the *Zodiac*, or belt of the sun, are called *the twelve signs of the Zodiac*. Their names are, with reference also to the months in which the sun is in them, as follow :—

நக்ஷத்திரங்களைப்பற்றிய சல்லாபம். பாகம் IV

சூரிய கச்சையிலிருக்கிற 12 கூட்ட நட்சத்திரங்களைப்பற்றிச் சல்லாபித்திருக்கிறோம். அவற்றின் பெயரை இப்போது சொல்லுவோம். கிழக்கத்தியார் அவற்றை அறிந்து சொல்லும்வரையும் மேற்கத்தியாருக்கு அதைப்பற்றி ஒன்றுமே தெரியாது. அவற்றின் கிழக்கத்திப் பேர் மேற்கத்தியாருக்கு எட்டினபோது, அவர்கள் தங்கள் மேற்கத்தி வாயால் உச்சரிக்க எளிதாய் அமைந்த பெயரை உள்ளபடியே வைத்துக்கொண்டு, வாய்க்கு அமையாதவற்றைக் கொச்சையாய் உச்சரித்து எழுதினார்கள். அப்படி ஓசையழிந்த பெயர்களைக் கிழக்கத்தியார் காதால் கேட்டால் அவற்றை இன்ன என அறிந்துகொள்ளமாட்டார். பெரும்பாலும் கிழக்கத்திப் பெயர்களை மேற்கத்தியார் தம் பாஷையில் திருப்பிக்கொண்டார்கள். எதிர்ப் பக்கத்தில் உள்ள படத்தில் இங்கிலீஷ் பெயர் இருக்கின்றன. அவற்றின் தமிழ்ப் பெயர்களை முனுஷியிடத்தில் கேட்டறியலாம். சூரியன் பிரயாணம் செய்கிற கச்சைக்கு இங்கிலீஷில் ஸோடியாக் என்று பெயர். அது ஒரு கல்தேயபதமோ அரபிச்சொல்லோ, தெரியாது. நக்ஷத்திரக் கணங்களும் அவையவை இருக்கும் இடமும் சேர்ந்து இங்கிலீஷில் கான்ஸ்டெல்லேஷன் எனப்படும். [தமிழில் ஸோடியாக் என்பது இராசி வட்டம், இராசிச் சக்கரம், இராசி வட்டை எனவும், கான்ஸ்டெல்லேஷன் என்பது மீன்கணம், மீன்ராசி, இராசி எனவும் பெயர் பெறும்.] சூரிய கச்சையிலிருக்கிற 12 நட்சத்திரக் கூட்டங்களுக்கு 12 இராசிகள் என்று பெயர். அவற்றின் பெயரும் சூரியன் அவற்றில் குடியிருக்கும் மாதவரையறையும் வருமாறு:—

1. The Ram. மேஷம் (ஆட்டுக்கடா). 18 மார்ச்சுக்கும் 18 ஏப்ரிலுக்கும் இடையுள்ள காலம்: சித்திரை மாதம்.
2. The Bull. ரிஷபம் (எருது). 18 ஏப்ரிலுக்கும் 18 மேய்க்கும் இடையுள்ள காலம்: வைகாசி மாதம்.
3. The Twins. மிதுனம் (இரட்டை). 18 மேய்க்கும் 18 ஜூனுக்கும் இடையுள்ள காலம்: ஆனி மாதம்.
4. The Crab. கர்க்கடகம் (நண்டு). 18 ஜூனுக்கும் 18 ஜூலைக்கும் இடையுள்ள காலம்: ஆடி மாதம்.
5. The Lion. சிங்கம். 18 ஜூலைக்கும் 18 ஆகஸ்ட்டுக்கும் இடையுள்ள காலம்: ஆவணிமாதம்.
6. The Virgin. கன்னி. 18 ஆகஸ்ட்டுக்கும் 18 செப்டெம்பருக்கும் இடையுள்ள காலம்: புரட்டாசி மாதம்.
7. The Balance. துலாம் (தராசு). 18 செப்டெம்பருக்கும் 18 அக்டோபருக்கும் இடையுள்ள காலம்: ஐப்பசி மாதம்.
8. The Scorpion. விருச்சிகம் (தேள்). 18 அக்டோபருக்கும் 18 நவம்பருக்கும் இடையுள்ள காலம்: கார்த்திகை மாதம்.
9. The Archer. தனுஸ் (வில்). 18 நவம்பருக்கும் 18 டிசெம்பருக்கும் இடையுள்ள காலம்: மார்கழி மாதம்.
10. The Sea-goat. மகரம் (சுறுமீன்). 18 டிசெம்பருக்கும் 18 ஜனுவரிக்கும் இடையுள்ள காலம்: தை மாதம்.
11. The Water-man. கும்பம் (நீர்க்குடம்). 18 ஜனுவரிக்கும 18 பெப்ருவரிக்கும் இடையுள்ள காலம்: மாசி மாதம்.
12. The Fishes. மீனம். 18 பெப்ருவரிக்கும் 18 மார்ச்சுக்கும் இடையுள்ள காலம்: பங்குனி மாதம்.

உலகத்தின் எந்தத் திசைக்குப்போனாலும் சர்வ ஜாதியாரும் நக்ஷத்திரக் கணங்களுக்கு இந்த உருவக் குறியீடும் உருவங்களுக்கு இங்கு சொன்ன பெயர்களுமே வழங்குகிறதைப் பார்க்கலாம். இதி

1. The Ram. 18th March to 18th April.
2. The Bull. 18th April to 18th May.
3. The Twins. 18th May to 18th June.
4. The Crab. 18th June to 18th July.
5. The Lion. 18th July to 18th August.
6. The Virgin. 18th August to 18th September.
7. The Balance. 18th September to 18th October.
8. The Scorpion. 18th October to 18th November.
9. The Archer. 18th November to 18th December.
10. The Sea-goat. 18th December to 18th January.
11. The Water-man. 18th January to 18th February.
12. The Fishes. 18th February to 18th March.

Now wherever you go in the world you will find all nations using these signs and calling them by their old names or translations of them in their own language, and this shows you that from very ancient times people knew all that I have already told you and a great deal more. They knew the sun was in a different *sign* every month; they knew that each *sign* rose two hours after the other; they knew that each *sign* rose about four minutes earlier every day; and they knew that each year the same *sign* rose and set at the same time as it did the year before. So all that I have done so far is not to tell you anything new, but to explain to you what your forefathers knew quite well, though perhaps you did not know it yourselves. I hope next time to tell you of what the ancients did not and could not know, because they had not the great help of later inventions, the principal of which are—the printing press, the telescope, and the art of photography.

Christmas Day.

When visiting in the Zenanas I have often been asked—What is the meaning of Christmas Day? So now I hope to be able in a few words to explain its meaning to you. It is not just a time of feasting, but of heartfelt praise and thanksgiving to God because it is the Festival of the Birth of our Lord Christ.

Christmas Day is kept every year on the 25th of December, and may fall on any day in the week, and it is such a special Festival that, wherever it is possible, all the members of Christian families meet, and rejoice together. On that day Christians go to church to pray and sing hymns of praise and thanksgiving because the Lord Christ came into the world to save mankind. They decorate the churches with flowers and leaves and verses out of the Holy Bible. In England (if I am not mistaken) banquets are prepared in every family, and gifts are distributed to the poor and needy, and to orphans. Very early in the morning bands of men and boys go through the streets singing joyful hymns to remind everyone of the Birth of the Lord Jesus. On Christmas evening, or shortly before that, a Christmas Tree is prepared. Its branches are adorned with wax candles and glittering ornaments—the candles being symbols of the Lord Christ, Who is the true Light, which has come into the world, and gives light to every man in the world. Upon this tree are hung presents for all the members of the family, and these are distributed among them with great rejoicing.

Perhaps you will ask me, Why should *we* rejoice with the Christians? What have we to do with them? and why should *we* be glad at the birth of Christ? What has He done for *us?* I will tell you a few reasons why you also should take part in our rejoicing. When Christ was born in Bethlehem in the land of Judæa, a band of shepherds were watching their flocks outside the town. Suddenly a great light shone round about them, and they heard the voice of an angel,

னால் வெகு பூர்வீகந்தொடங்கியே இதுவரை நான் சொன்ன விஷயங்களையும் அவற்றைத் தவிர வேறு விஷயங்களையும் மானிடர் அறிந்திருந்தார்கள் என்பது விளங்கும். சூரியன் மாதமொரு இராசியிலிருக்கிறதும், ஒவ்வொரு இராசியும் அதற்கு முந்தினதிற்கு 2 மணிநேரம் தாழ்ந்து உதயமாகிறதும், ஒவ்வொரு இராசியும் நாடோறும் 4 நிமிஷங்கள் முந்தி உதிக்கிறதும், ஒரு ராசி எந்த மாதம் எந்தத் தேதியில் முந்தின வருஷம் உதித்ததோ அதேமாதம் தேதியில் வருஷந்தோறும் உதிக்கிறதும் அவர்களுக்குத் தெரிந்திருந்தது. ஆகவே, இதுவரை நான் உங்களுக்குச் சொன்னது வெகு பூர்வத்தியாருக்குத் தெரிந்ததே தவிர நூதனமல்ல. இனிப் பூர்வத்தாருக்குத் தெரியாத விஷயங்களை உங்களுக்குச் சொல்வேன். அவர்களுக்கு அச்சியந்திரம், தூரதிருஷ்டிக்கண்ணாடி, ஒளிப்படம் எடுத்தால், இவை தெரியாமையினால் நானினிச் சொல்லப்போகிற புது விஷயங்கள் அவர்களுக்குப் புலப்பட்டதில்லை.

கிறிஸ்து ஜயந்திநாள்

ஹிந்துஸ்திரீகளை நான் கண்டு பேசப்போன சமயங்களில் கிறிஸ்மஸ் என்கிறார்களே, அதென்ன? என்று பலர் என்னைக் கேட்டார்கள். அது உண்டுடுத்துக் களியாட்டுச்செய்யும் நாளல்ல, நம் ஆண்டவராகிய கிறிஸ்து பிறந்ததற்காகத் தேவனுக்கு நன்றிசெலுத்தும் நாள். அது வருஷா வருஷம் டிசெம்பர்மாதம் 25-ந் தேதி வரும். அது வாரத்தில் எந்தக் கிழமையிலானாலும் வரும். அச்சமயம் கிறிஸ்தவ குடும்பத்தின் அவயவங்கள் கூடுமானமட்டும் எந்த இடத்திலிருந்தாலும் ஒரு இடத்தில் கூடி ஒருமித்துச் சந்தோஷம் கொண்டாடுவார்கள். கிறிஸ்தவர்கள் அப்போது கோவிலைப் புஷ்பங்கள், பத்திரங்கள், திருவசனச் சித்திரப்படங்கள், இவற்றால் ஜோடித்து மானிடரை இரக்ஷிக்க கிறிஸ்தாண்டவர் பூவுலகுக்கு வந்ததை நினைத்துக் கோவிலில் தோத்திரப்பாட்டுகள் பாடியும் திருஜெபங்கள் ஜெபித்தும் உள்ளக்கனிவான நன்றியைத் தேவனுக்குச் செலுத்துவார்கள். இங்கிலாந்தில் செல்வமுள்ளவர்கள் மங்களவிருந்துகள் உண்பதும், எளியவர் வறியவருக்கும் தாய்தந்தையில்லாப் பிள்ளைகளுக்கும் வேண்டுவது அளிப்பதும் அச்சமயத்தில் வழக்கம். வைகறைக்குமுன்னரே ஆடவரும் வாலிபரும் பவிஞ்சு பவிஞ்சாய் வீதிகளில் சென்று இயேசு பகவான் பிறந்ததை நினைப்பூட்டும் சந்தோஷப்பாட்டுகள் பாடி உலவுவார்கள். கிறிஸ்து ஜயந்தி இரவில் கிறிஸ்து ஜயந்தி விருக்ஷத்தை வீடுகளில் வைப்பார்கள். அதின் கிளைகளில் தேன்மெழுகுவத்திகள் வைத்து மினுக்குப் பண்டங்களால் அலங்காரங்கள் செய்திருக்கும். வத்திகள் இயேசு பகவானுக்கு அறிகுறி. ஏனெனில் அவரே உலகத்தில் வந்து உலகிற் பிறக்கும் ஒவ்வொரு மானிடப் பிராணிக்கும் ஒளிதருகிற மெய்வெளிச்சம். இந்தக் கிறிஸ்து ஜயந்தி மரத்திலே குடும்பத்தின் ஒவ்வொரு அவயவத்திற்கும் தனித்தனியே வெகுமதிகள் வைத்திருக்கும். வெகு சந்தோஷத்துடன் அவை அவரவருக்குப் பகிரப்படும்.

நீங்கள் என்னைப் பார்த்து அது சரியே. ஆனால், நாங்கள் கிறிஸ்தவர்களுடன் அன்று சந்தோஷப்பட நியாயம் என்ன? கிறிஸ்து பிறந்ததினால் எங்களுக்கு என்ன வந்தது? எங்களுக்கு அவர் என்ன செய்தார்? என்று கேட்பீர்கள். நீங்களும் மகிழ்வது சரிதான் என்று சில காரணங்கள் உங்களுக்குச் சொல்வேன். கிறிஸ்து யூதேயா நாட்டிலிருக்கிற பெத்லகேமில் பிறந்த காலத்தில் ஒரு கூட்டம் இடையர்கள் அந்தப் பட்டணத்திற்கு வெளியே தங்கள் ஆட்டுமந்தையைக் காத்துக்கொண்டிருந்தார்கள். திடீரென ஒரு வெளிச்சம் வந்து அவர்களைச் சூழ்ந்தது. ஒரு தெய்வதூதன் வந்து: ‘உங்களுக்கு ஒரு பெரிய சந்தோஷ செய்தி கொண்டு வந்திருக்கிறேன். கர்த்தராகிய கிறிஸ்து என்ற இரக்ஷகர் இந்நகரில் இன்று உங்களுக்காகப் பிறந்திருக்கிறார்’ என்று சொன்னவுடனே ‘உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியில் சமாதானமும் மனிதர்மேல் பிரியமும் உண்டாவதாக’ என்று வாழ்த்தினார்கள். அந்தத் தெய்வதூதர் புவிக்குக் கொணர்ந்த நல்ல செய்தி புவிமீதுள்ள எல்லா மனுஷருக்குமே செல்லும் செய்தி. அந்நாள்

saying: "Behold I bring you tidings of great joy; Unto you is born this day, in this town, a Saviour, Who is Christ, the Lord." And then a great multitude of angels appeared, who sang praises to God, and said: "Glory to God in the highest and on earth peace, good will to men."

Notice that the good tidings of great joy, which the angels brought when Christ was born in the town of Bethlehem, were for *all* people, and from that time to the present these good tidings have been carried to all the nations of the world. Those people who believe the good news, find the true joy which can never be taken away from them. The pleasures of silver and gold will vanish some day, but this joy will remain as long as life shall last.

When the Lord Christ was born there were a few people who knew something of the will of God, but no one could clearly make it known, because there was not one among them who was wholly free from sin. Even those who claimed to be great teachers were obliged to confess that they could tell the people nothing about true joy. God Himself devised the plan by which the world might be saved.

Another time I hope to explain to you more fully why all the people in the world should unite in rejoicing on the Birthday Festival known as *Christmas Day*.